இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள்; அவர் அண்மையில் இருக்கும் போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்; அவர்அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்; அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்; ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர். என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர். (எசாயா 55:6-8)



# உலகில் கிறிஸ்துவை அறிவித்தல் பணி நம்மை ஒன்றுபடுத்துகின்றது

**வத்திக்கான்:** நம்மைத் தூய்மைப்படுத்தும் செபம், இணைக்கும் தொண்டுப்பணிகள், ஒன்றிணைக்கும் உரையாடல் ஆகியவற்றில் ஒன்றிணைந்துப் பயணிப்போம் என்றும், கிறிஸ்துவை அறிவிப்பது என்பது நம்மை ஒன்றுபடுத்துகிறது மாறாக பிரிக்கவில்லை என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

செப்டம்பர் 11 திங்கள் கிழமை வத்திக் கானில் ஆர்த்தடாக்ஸ் சீரோ மலங்கரா கத்தோலிக்க சபையின் தலைவர் மூன்றாம் பசேலியோஸ் மர்த்தோமா மத்தியூஸ் அவர்களை முதன் முறையாக சந்தித்த போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நமது இறைவனின் பொதுவான அழைப்பு கிறிஸ்தவ ஒன்றிப்புப் பயணத்தையே அறிக்கையிடுகின்றது என்றும் கூறினார்.

திருத்தூதர் புனித தோமாவின் நம்பிக்கை கிறிஸ்துவின் உடலில் ஏற்பட்ட காயங்களின் அனுபவத்திலிருந்து பிரிக்க முடியாதது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்தவர்களாகிய நம்மிடையே வரலாறு நெடுகிலும் ஏற்பட்டுள்ள பிளவுகள், திருஅவையாகிய கிறிஸ்துவின் உடலில் ஏற்படுத்தப்பட்ட வலிமிகுந்த காயங்கள் என்றும், அதன் விளைவுகளை நாம் இன்னும் நேரடியாக அனுபவித்து வருகிறோம் என்றும் எடுத்துரைத்தார்.

இக்காயங்களில் நாம் ஒன்றிணைந்து நமதுக் கையை இடும்போது, திருத்தூதர் தோமாவைப் போல என் ஆண்டவரே என் கடவுளே என்று பறைசாற்றவும், தாழ்மையான இதயத்துடன் அவருடைய அருளைக்குறித்து வியந்து நம்பும்போது, உயிர்ப்பின் மறைபொருளை விரைவில் கொண்டாடவும் முடியும் என்றும் எடுத்துரைத்தார்.



*திருத்தந்தையுடன் ஆர்த்தடாக்ஸ் சீரோ மலங்கரா கத்தோலிக்க சபை தலைவர்*

நம்மைத் தூய்மைப்படுத்தும் செபம், நம்மை இணைக்கும் தொண்டுப்பணிகள், நம்மை ஒன்றிணைக்கும் உரையாடல் ஆகியவற்றில் ஒன்றிணைந்துப் பயணிப்போம் என எடுத்துரைத்தார்.

உருவாக்கத்தில், சொல் வேறுபாடுகள், மற்றும் முக்கியத்துவம் வரலாறு முழுவதும் எழுந்தாலும், இந்த வேறுபாடுகள் நம்மைப் பிரிக்கக்கூடாது என்றும், உலகெங்கிலும் உள்ள நமது சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்துவை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அறிவிப்பதாக இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு

கிறிஸ்தவ ஒன்றிப்பு எப்போதும் ஓர் அரவணைப்புத் தன்மையைக் கொண்டுள் ளது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், நற்செய்தி அறிவிப்பிலும், நம்பிக்கை யாளர்களின் உறுதியான கவனிப்பிலும் மனித உடன் பிறந்த உணர்வுடன் முன்னேறிச் செல்வதன் வழியாக கிறிஸ்துவின் ஒரே மந்தையாக நாம் நம்மை அங்கீகரிக்கிறோம் என்றும் எடுத்துரைத்தார்.

முழு ஒற்றுமையை நோக்கிய நமது பயணத்தில், மற்றொரு முக்கியமான பாதை

**கிறிஸ்தவ ஒன்றிப்பு எப்போதும் ஓர் அரவணைப்புத் தன்மையைக் கொண்டுள்ளது - திருத்தந்தை**

சினோடலிட்டி என்னும் ஒருங்கிணைந்த பயணம் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "இரண்டாம் வத்திக்கான் சங்கம் முதல், கத்தோலிக்க திருஅவையின் செயல்பாட்டில் ஆர்த்த டாக்ஸ் மலங்கரா கத்தோலிக்க சபை பிரதிநிதிகளின் பங்கேற்பு, இணக்கமான புரிதலின் வளர்ச்சிக்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் கூறினார்.

சினோடலிட்டி மற்றும் எக்குமெனிசம் என்னும் இரண்டும் ஒன்றாகச் செல்லும் ஒரே பாதைகள் என்றும், ஒரே இலக்கைப் பகிர்ந்து கொண்டு, ஒற்றுமையுடன், தந்தைக் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று உலகம் நம்பும் கிறிஸ்துவின் சிறந்த சாட்சியாக வாழ நமக்கு உதவுகின்றன என்றும் எடுத் துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# கோலசிலாங்கூர், அசாம் ஜாவாவில் புனித ஆரோக்கியமாதா திருவிழா கொண்டாட்டம்

**கோலாசிலாங்கூர்:** கடந்த செப்டம்பர் 7 தொடங்கி 10-ம் திகதி வரை இங்குள்ள புக்கிட் அசாம் ஜாவாவில் அமைந்துள்ள, புனித ஆரோக்கிய மாதா சிற்றாலயத்தின் திருவிழா கொடியேற்றத்துடன் இனிதே நடைபெற்றது.

திருவிழா தினமான 10 செப்டம்பர், ஞாயிற்றுக்கிழமையன்று “எல்லா தலைமுறை களும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே” என்ற கருப்பொருளில் திருவிழா திருப்பலியை பங்குத் தந்தை மறைத்திரு ஜேம்ஸ் கேபிரியேல் மற்றும் திருத்தொண்டர் ஞானசெல்வம் இருவரும் இணைந்து கொண்டாடினர்.



நான்கு நாள்கள் நடைபெற்ற திருவிழா திருப்பலிகளில் ஏறக்குறைய 800 பேர் கலந்து கொண்டு அன்னை மரியாவின் பரிந்து ரையையும் ஆசீரையும் பெற்று மகிழ்ந்தனர் என்று இவ்வாலயத்தின் தலைவர் மா. வேளாங்கண்ணி கூறினார். குழந்தை வரம் வேண்டி நிறையப் பேர் இவ்வாலயத்திற்கு வருவர் என்றும் அவர்களின் வேண்டுதல்கள் நிறைவேறி



காணிக்கை செலுத்துவர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சனிக்கிழமை இரவு அன்னை மரியாவின் சுருபம் ஆலயத்தை சுற்றி ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு நவநாள் திருப்பலிக்குப் பின்னரும் அனைவருக்கும் சிற்றுண்டியும் திருவிழா அன்று மதிய உணவும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



*-அந்தோணி மாசிலாமணி, கோலசிலாங்கூர்*

# பாரிட் புந்தார், புனித ஆரோக்கிய அன்னை திருவிழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்



**பாரிட் புந்தார்**- பேராக், கிரியான் மாவட்டத்தில் அமைந்துள்ள பாரிட் புந்தார் புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தின் 120 -ஆம் ஆண்டு திருவிழா, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துக் கொள்ள மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

இந்த இரண்டு நாள் திருவிழாவில் கலந்துக் கொண்ட மக்கள், திருவிழா திருப்பலியில் கலந்துக் கொண்டதோடு, மெழுகுவர்த்திகளை ஏந்தியும், காணிக்கைகளை செலுத்தியும் தங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றினர். மேலும் பாரிட் புந்தார் நகரில் வலம் வந்த புனித ஆரோக்கிய அன்னையின் சுற்றுப்பவனியில் இறைமக்கள் பக்தியோடு பங்கேற்றனர்.

இவ்வாண்டு திருவிழாவிற்கு சிறப்பு சேர்க்கும் வகையில், பாரிட் புந்தார் புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்திற்கு பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றிருக்கும் மறைத்திரு மார்டின் அருளாந்து தலைமையில், மற்ற மாநிலங்களிலிருந்து



சிறப்பாக வருகைப்புரிந்த அருள்தந்தையர்களான வின்சன்ட் தோமஸ், ஜோர்ஜ் ஹறிசன், ஆல்பர்ட் ஆரோக்கியசாமி, விக்டர் லூயிஸ், பிரான்சிஸ் சேவியர் மற்றும் Msgr. ஹென்றி ராஜு ஆகியோர் உடனிருந்து திருப்பலிகளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.



பல சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்ற திருவிழாவின் இரண்டாவது நாளில்,



திருப்பலிக்குப் பிறகு தோழமை விருந்து-பசரிப்பும் இடம்பெற்றது. இவ்வாண்டு திருவிழா சிறப்பான முறையில் நடைபெற அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய பங்குத்தந்தை மார்ட்டின் அருளாந்து அவர்களுக்கும், வருகைத்தந்த அனைத்து அருள்பணியாளர்களுக்கும், பணிக்குளுக்களுக்கும், ஏற்பாட்டுக் குழுவினருக்கும் அதன் தலைவர் ஞானப் பிரகாசம் ஜோன் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

-த.மேத்தியூஸ்

# முதியோருக்கான கிறிஸ்தவ புகுமுக சடங்குமுறை பொறுப்பாளர் உருவாக்கப் பயிற்சி

**கிள்ளான்:** கடந்த 16 செப்டம்பர், சனிக்கிழமையன்று, இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கின் முதியோருக்கான கிறிஸ்தவ புகுமுக சடங்குமுறை (RCIA) பணிக்குழுவினருக்கான சிறப்பு பயிலரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. பங்குத் தந்தை கிரிகோரி சான் அவர்களின் ஆதரவோடு ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிலரங்கம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை சகோ. ஆர்.கே.சாமி அவர்களால் வழிநடத்தப்



பட்டது.

ஆர்.சி.ஐ.ஏ. என்று வழக்கமாக அழைக்கப்படும் இப்பயிற்சி 1990-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கொணர்ந்த மறுமலர்ச்சியின் நிமித்தம் நாடுகள் தோறும் இந்த முதியோருக்கான கிறிஸ்தவ புகுமுக சடங்குமுறை சீர்த்திருத்தங்களுடன் திருஅவையில் மீண்டும் அறிமுகப்படுத்தப் பட்டது என்பது சுருக்கமான வரலாறாகும்.

இப்பயிலரங்கதில் ஆர்.சி.ஐ.ஏ. பாடத் திட்டத்தில் காணப்படும் படிகள், காலங்கள் மற்றும் சடங்குகள் ஆகிய ஒவ்வொன்றையும் சகோ. ஆர்.கே. தெளிவுப்படுத்தினார். குறிப்பாக முன் ஆயத்தக்காலத்திற்கும் அடுந்நு வரும் ஆயத்தகாலத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும், வகுப்புக்கு வருவோரின் எதிர்ப்பார்ப்பையும், உளவியலையும் எடுத்துரைத்தார்.

இதில் ஆர்.சி.ஐ.ஏ. என்பது ஒரு ஓட்டப்பந்தையம் அல்ல விரைவாக ஓடி முடிப்பதற்கு. அது ஒரு செயல்முறை. மனமாற்றத்திற்கான நம்பிக்கை விதை விதைக்கும் பயணம் என்பதை தெளிவுப்படுத்தினார்.



யோவான் நற்செய்தியில் 1:47-49 வரை உள்ள பகுதியில், பிலிப்பு நத்தனியேலிடம் “வந்து பாரும்” என்று அவரை இயேசுவிடம் அழைத்து வந்ததை மையமாகக் கொண்டு, ஆர்.சி.ஐ.ஏ. வகுப்புக்கு வருவோருக்கு மெல்ல மெல்ல இயேசுவை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பிரிந்த ஒன்றைக் கொண்டு பிரியாத ஒன்றை விளக்குவதும், வகுப்பில் உள்ளவர்களை மையமாக்க் கொண்டு, மனித மைய முறையில் கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்

நிறைவாக, வகுப்பில் உள்ளவர்களை மதம் மாற்றம் செய்வதை நோக்கமாகக் கொள்ளாமல், அவர்கைள இயேசுவின் சீடர்களாக உருமாற்றம் செய்வதுதான் குழுவினரின் பணி என்பதையும் தெளிவுப்படுத்தினார்.

நிறைவாக கேள்வி பதில் நிகழ்வோடு இப்பயிலரங்கம் ஒரு நிறைவை நாடியது. ஏற்பட்டுக்குழு தலைவர் அ. ஜேசுதாஸ் அவர்கள் பங்குத்தந்தைக்கும் வருகையாளர்களுக்கும் நன்றி கூறியதோடு, மதிய உணவும் வழுங்கப்பட்டது.

**கிறிஸ்தவ ஒன்றிப்பு இல்லாமல் ஒன்றிணைந்த பயணம் இல்லை!**

**ஒன்றிணைந்த பயணம் இல்லாமல் கிறிஸ்தவ ஒன்றிப்பு இல்லை!**

**-அருள்சகோதரி நத்தாலியே**

# சகோதரத்துவத்தில் சமத்துவம் காண்போம்!

இன்று ஆண்டின் பொதுக் காலத்தின் 25-ம் ஞாயிறு. முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் “ஆண்டவர் அண்மையிலேயே இருக்கிறார். அவரைத் தேடி நாடுங்கள் என்று கூறுகிறார். அவ்வாறென்றால், கடவுள் நம் அருகிலேயே இருக்கிறார். ஆனால் நாம் அவரைத் தேடவேண்டும். அவரை நினைக்க வேண்டும். நம்மில் பலர் இந்த ஆலயம், அந்த ஆலயம் என்று ஓடி ஓடி சென்று வழிபடுவோம். ஆனால் அவரை உளமார நினைத்தாலே நம் அருகில் கடவுள் இருப்பதை நம்மால் உணரமுடியும். அதைத் தான் எசாயா கூறுகிறார். .

இன்றைய திருப்பாடலும் அதை மீண்டும் நமக்கு நினைவூட்டி ஆறுதல் அளிக்கிறது. “தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அன்மையில் உள்ளார். ஆண்டவரைத் தேடுவோரின் நம்பிக்கை என்றுமே வீண்போகாது.

இன்றைய நற்செய்தி விருவிருப்பான நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது. நம் விண்ணகத் தந்தையின் பண்புகளை முழுமையாக இதில் காணலாம். அவருடைய பண்புகளுள் ஒன்று “சகல நன்மைகளுக்கும் அவரே காரணமாய் இருக்கிறார்” இதை நாம் அடிப்படை மறைக்கல்வியில் வாசிக்கின்றோம். இன்றைய நற்செய்தியில் இயேசு தம்மோடு இருந்த திருத்தூதர்களுக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் ஒரு வேறுபாடான போதனையை இந்த உவமையின் வாயிலாக எடுத்துக்காட்டுகிறார்.

ஒருநாளில் பல்வேறு நேரத்தில் பணிக்கு அமர்த்தப்படும் வேலையாள்களை அனைத்து நன்மைகளுக்கும் காரணமான கடவுள் எவ்வாறு ஒரே விதமாக நடத்துகிறார் என்பதைக் காட்சிப்படுத்துகிறார் நம் ஆண்டவராகிய இயேசு. வாழ்வின் எந்தக் காலக்கட்டத்தில் அவரை நாடிவந்தாலும், அவர் தரும் பரிசு, நிபந்தனையற்ற அன்பும் மன்னிப்பும் ஆசீர்வாதங்களும். அதுதான் முடிவில்லாத நிலைவாழ்வு. நமது தேவை அறிந்து நிறைவு செய்பவர் நம் விண்ணகத் தந்தை.

இந்த மாதம் நாம் சிந்திக்கவும் செயல்படுத்தவும் இருக்கும் கருப்பொருள்: விளிம்புநிலையில் வாழும் மக்களும் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம். நற்செய்தியில் நாம் பார்க்கும் வேலையாட்களை இந்த மக்களோடு இணைத்துப் பார்ப்போம். நாள் முழுவதும் காத்திருந்தும் யாரும் இவர்களுக்கு வேலை தரவில்லை. வேலை செய்தால் தான் அவர்களின் குடும்பத்திற்கு இவர்களால் உணவளிக்கமுடியும். அனைத்து நலன்களும், நன்மைகளும் நிறைந்த விண்ணகத் தந்தை நம்மை ஒரேமாதிரியாக நடத்துகிறவர். நம்முடைய திறன்களோ, அறிவோ, அவருக்கு ஒருபொருட்டல்ல; என்னை அழைத்தவர் உங்களையும் அழைத்துள்ளார். நம்மை அழைத்தவர் தான் நம்மிடையே இருக்கும் குடியேற்றவாசிகளையும் அகதிகளையும், விளிம்புநிலையில் வாழும் ஒவ்வொருவரையும் அழைத்துள்ளார் அவர்களை நாம் ஒரே நிலையில் நடத்துவோம்.

நமது பங்குகளில், “நாங்கள் எல்லாம் காலம் காலமாக இந்த பங்கில் இருக்கிறோம். நேற்று வந்தவருக்கு குருவானவர் அப்பொறுப்பை கொடுத்துவிட்டார்”. இது நியாயமா என்றுதான் பிரித்துப் பார்க்கிறோம். பின்னர் குருவானவருக்கு ஆதரவாக ஒரு பிரிவினரும் எதிராக ஒரு பிரிவினருமாக பங்கைகக் கூறுபோடுகிறோம். அனைவரும் விண்ணரசுக்கு உரியவர்கள் என்பதாக நாம் எண்ண தவறுகிறோம். நமது எண்ணம் கடவுளின் எண்ணமாகாது என்பதை நினைவில் கொள்வோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 25ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசாயா 55: 6-9 |
| தி.பாடல் | 145: 2-3, 8-9, 17-18 |
| 2-ம் வாசகம் | பிலி: 1: 20-24, 27 |
| நற்செய்தி | மத்தேயு 20:1-16 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 4**